


அறிவித்தல்

# பலவித மொழிகளைப் பேசும் குடும்பம்

வாழ்த்துக்கள், அதனால் உங்கள் பிள்ளைக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்துகிறீர்கள் சாதாரணமாக பலமொழிகளைப் பேசும் சூழலில் வளர்கின்ற பிள்ளைகள் மேலும் இன்னும் ஒரு மொழி படிப்பதில் சிரமம் இல்லாமல் படிப்பார்கள். அதற்கு நீங்கள் உதவி செய்யலாம்.

# பலவித மொழிகளைப் பேசும் குடும்பம்

TAMIL

## வீட்டில் என்ன மொழி கதைக்க வேண்டும்? பெற்றேர்களின் தாய்மொழி.

சாதாரணமாக தாயும் தந்தையும் அல்லது மற்றைய குடும்பஉறுப்பினர்கள் தங்களுக்கு நன்கு தெரிந்த மொழியில் கதைத்தல் நல்லது கூடுதலாக அது தாய்மொழியாக இருக்கும். தாய்மொழி படிப்பதற்கு எடுத்துக்காட்டாக நீங்கள் தேவைப்படுகிறீர்கள். அத்துடன் இன்னும் பல மொழிகள் படிப்பதற்கும் ஏற்றதாக இருக்கும்.

## தொடர்ந்து பாலர்பாடசாலைக்குப் போவது டொச்மொழி படிப்பதற்கு உதவியாகும்.

உங்கள் பிள்ளை பாலர் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பிக்கும் போது டொச் தெரியாது என்றால் கவலைப்பட வேண்டாம். அப்படியானாலும் நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் தொடர்ந்து உங்கள் தாய்மொழியிலேயே கதையுங்கள். பாலர்பாடசாலையில் மற்றைய பிள்ளைகளுடனும் பராமரிப்பாளர்களுடனும் கதைத்து அவர்கள் டொச்மொழியை தெரிந்து கொள்வார்கள். அதற்காக உங்கள் பிள்ளை பாலர் பாடசாலைக்குச் செல்வது அவசியம். எவ்வளவு கூடுதலாக டொச்மொழி பேசும் பிள்ளைகளுடன் கதைத்து விளையாடுகிறார்களோ அவ்வளவு விரைவாக டொச் மொழியை தெரிந்து கொள்வார்கள்.

## பிள்ளைகள் மொழியுடன் மொழியைக் கலப்பார்கள்.

பிள்ளைகள் மொழிபடிக்கும் போது பிழைகள் விடுவது சாதாரணம் அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் பிள்ளையின் முயற்சியை. உதாரணமாக முன் சுட்டுச்சொல் விடப்படல் „Gib mir das Blatt”க்குப் பதிலாக „Gib mir Blatt“ இணைச்சொற்கள் பிழையாகப் பயன்படுத்துவது „auf dem Baum“ க்குப் பதிலாக „bei Baum“ பொதுவாக இருமொழிபேசும் பிள்ளைகள் இரண்டு மொழிகளையும் கலப்பார்கள். உதாரணம் „இது என் Ball“. இது மொழித்திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டுஏதாவது கேள்விகள் தேவைப்பட்டால் பாலர்பாடசாலைபராமரிப்பாளரிடமோ அல்லது குழந்தை வைத்தியரிடமோ கேட்டறியலாம்.



## பிள்ளை டொச் மொழி மட்டும் கதைக்கின்றது

எங்கள் பிள்ளை டொச் மொழிமட்டும் தான் கதைக்கிறது தாய்மொழி கதைப்பதில்லை என்பது பெற்றோர்களின் குற்றச்சாட்டு ஆனாலும் தொடர்ந்து உங்கள் தாய்மொழியிலே நீங்கள் கதையுங்கள் அவர்கள் கேட்டுக்கேட்டு உள்வாங்கி அறிந்து கொள்வார்கள்.

## கதைப்பது நல்லது

பிள்ளைகளுடன் அதிக நேரங்களை செலவிடுங்கள். கதைசொ-ல்லுதல், வாசித்தல், விளையாடுதல் அதனால் மொழியுடன் கூடிய அதன் உணர்வையும் ஏற்படுத்தலாம

## பல மொழிகளுடன் வாழுவது ஒரு வாய்ப்பு

பல மொழிகளைப் படிப்பதற்கு நீங்கள் வாய்ப்புக்களை கொடுக்க வேண்டும். உங்கள் தாய்மொழியும், கலாச்சாரமும் எவ்வளவு முக்கியமானதோ அதுபோல டொச்மொழியும் எதிர்காலத்தில் இருக்கவேண்டும். எல்லா மொழிகளையும் மதிக்க வேண்டும் என்பதை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் பாலர் பாடசாலை, பாடசாலை என்பவற்றிற்கு பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவீர்கள்.